# IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

**SC.No**.178/2022 **Date**: 05.02.2025.

அ.சா.4-தினேஷ்

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நானும் என் அப்பாவும் கூட்டு குடும்பமாக வசிக்கிறோம். நாங்கள் வசிக்கும் வீட்டு முகவரிக்கு குடும்ப அட்டை, ஆதார் அட்டையுள்ளது. நாங்கள் வசிக்கும் வீடு கட்டி 15 வருடங்கள் இருக்கும். அதற்கு முன்பு அருகிலுள்ள வேறு வீட்டில் வசித்தோம். அந்த வீடு பழைய வீட்டிற்கு எந்த திசையிலுள்ளது என்றால் எனக்கு திசை தெரியாது. போலீஸ் விசாரணையின் போது நான் வசிக்கும் வீட்டின் கதவு எண்ணை சொல்லவில்லை. என் அப்பா சுயமாக வாங்கிய மற்றும் பூர்வீக நிலங்களை நாங்கள் கூட்டாக அனுபவிக்கிறோம். அதற்கான ஆவணங்களும் உள்ளது என்றால் சரிதான். 40 செண்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என் அப்பாவிற்கு தான் தெரியும். நான் போலீஸ் விசாரணையின் போது எங்கள் குடும்பத்திற்கும் எங்கள் பங்காளி குமாரசாமி குடும்பத்திற்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முன் விரோதம் இருந்து வருகிறது என்றும் எனது அப்பா இருவருக்கும் பாத்தியப்பட்ட பாகரறார் செய்யாத 40 செண்ட் நிலத்தில் வீடு கட்டியுள்ளார் என்றும் சொல்லவில்லை. சம்பவத்தின் போது நான் பயன்படுத்தி வந்த அலைபேசியின் எண்.94888-19333. சம்பவம் பற்றி எனக்கு தகவல் வந்த போது நான் திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி வந்து கொண்டிருந்தேன். சம்பவம் பற்றி நான் போலீசுக்கு தகவல் சொல்லவில்லை. நான் செல்வதற்கு முன்பே போலீசுக்கு தகவல் சொல்லிவிட்டார்கள். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 3 கி.மீ தொலைவிலுள்ளது. நான் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். நான் சம்பவ இடம் சென்ற போது என் அப்பாவின் உடையிலும், தரையிலும் அ.சா.2, 3ன் உடையிலும் இரத்த கறையிருந்ததை பார்த்தேன். நான் தான் என் அப்பாவை அணைத்து தூக்கி காரில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் கையை பிடித்து தான்

அழைத்து சென்றேன். நான் மருத்துவமனை செல்லும் போதே அங்கு போலீசார் இருந்தார்கள் என்றால் அவர் சிகிச்சையில் இருந்த போது தான் வந்தார்கள். நடந்த விவரத்தை நான் போலீசாரிடம் சொன்னேன். நானும் கையெழுத்து செய்தேன் என்றால் என் அப்பா தான் வாக்குமூலம் கொடுத்தார். அப்போது நானும் உடனிருந்தேன். புகார் வாக்குமூலத்தை பதிவு செய்த போலீஸ் அதிகாரியின் பெயர் தெரியாது. உதவி ஆய்வாளர் எழுதினார். கே.எஸ்.மணி என்ற SSI எழுதினாரா என்றால் ஆமாம். அவர் வாக்குமூலம் பதிவு செய்து கொண்டு இரத்த கறை படிந்த என் அப்பாவின் உடைகளை வாங்கி கொண்டார் என்றால் ஆமாம். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் என் அப்பா உருவாக்கிய வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-தினேஷ்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.